வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 10.01.2026 சனிக்கிழமை | இதழ் : 10 | பக்கங்கள் : 08




# மீளப்பெற்ற 65 வழக்குகள் மீண்டும் விசாரணைக்கு!

## அறிவித்தார் பிரதமர் ஹரிணி



கொழும்பு, ஜனவரி. 10

2019 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் நீதிமன்றங்களிலிருந்து மீளப்பெறப்பட்ட 65 வழக்குகள், தற்போதைய அரசாங்கத்தினால் மீண்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி.பெரேரா எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இந்த விவரங்களை வெளியிட்டார்.

2019 முதல் 2024 வரை இலஞ்ச ஊழல் ஆணைக்குழு மற்றும் சட்ட மாஅதிபர் திணைக்களத்தினால் மொத்தம் 102 வழக்குகள் மீளப்பெறப்பட்டுள்ளன.

இந்த 102 வழக்குகளில் 65 வழக்குகள் தற்போது அரசாங்கத்தினால் மீண்டும்

07

# புயலால் பாதிப்புற்ற மக்களுக்கு புதிய வீடமைப்பு திட்டத்தை ஆரம்பித்து வைத்தார் அநுர!



கொழும்பு, ஜன. 10

டித்வா சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புதிய வீடுகளை அமைத்துக் கொடுக்கும் தேசிய வேலைத்திட்டத்தை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

07

# தைப்பொங்கல் தினத்தன்று யாழ்.வருகிறார் ஜனாதிபதி!

## காணி விடுவிப்பு குறித்து அறிவிப்பார்?

கொழும்பு, ஜன. 10

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் 15 ஆம் திகதி தைப்பொங்கல் தினத்தன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

குறித்த விஜயத்தின்போது, காணிகளை விடுவிப்பது, வீதிகளைத் திறப்பது, தையிட்டி திஸ்ஸ விகாரையால் ஏற்பட்டுள்ள பிரச்னைகள் ஜனாதிபதி கவனம் செலுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை யாழ்ப்பாணத்தில் நடைபெறும்

07

## நில இணைப்புத் திட்டம்

# இலங்கை அரசின் பதிலை எதிர்பார்க்கிறது இந்தியா!

புதுடில்லி, ஜன. 10

இந்தியா மற்றும் இலங்கை இடையிலான நில இணைப்பு திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பது குறித்த முன்மொழிவுக்கு இலங்கை அரசின் பதிலை இந்தியா இன்னும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக, இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா, ஊடகவியலாளர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலின்

07

# வடக்கு நோக்கி நகர்கின்றது காற்றழுத்த தாழ்வு மண்டலம்

யாழ்ப்பாணம், ஜன. 10

வங்காள விரிகுடாவில் திருகோணமலைக்கு கிழக்காக 80 கி.மீ. தொலைவில் காணப்படும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் தொடர்ச்சியாக வடக்கு நோக்கி நகர்ந்து வருகிறது என யாழ்.பல்கலைக்கழக புவியியல்துறைத் தலைவர் பேராசிரியர் நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நேற்று காலை 9.00 மணியிலிருந்து இதனை டைய நகர்வு வேகம் மிக மிக குறைவாகவே

07

# 16 வயது சிறுமி பாலியல் வன்புணர்வு; குற்றவாளிக்கு 10 வருட கடூழிய சிறை!

## வவுனியா மேல் நீதிமன்றம் தீர்ப்பு

வவுனியா, ஜன. 10

வவுனியா, விநாயகபுரம் பகுதியைச் சேர்ந்த 16 வயதுக்குட்பட்ட சிறுமியை பாலியல் வன்புணர்வு புரிந்த குற்றவாளிக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறை தண்டனை வழங்கி வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம். எம்.மிஹால் தீர்ப்பளித்துள்ளார்.

கடந்த 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18ஆம் திகதி வவுனியா, விநாயகபுரம் பகுதியைச் சேர்ந்த 16 வயதுக்கு உட்பட்ட சிறுமியை கடத்திச் சென்று பாலியல் வன்புணர்வு

07

# முக்கிய வழக்குகளின் ஆதாரங்கள் அழிப்பா? கண்டறிவதற்கு சி.ஐ.டியினர் தீவிர விசாரணை

கொழும்பு, ஜன. 10

உயர்மட்ட வழக்குகளுடன் தொடர்புடைய முக்கிய ஆதாரங்களை மாற்றியமைத்தல் அல்லது அழித்தல் குறித்து குற்றப் புலனாய்வுத்துறை (சி.ஐ.டி) விரிவான விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

சில வழக்குகள் மிகவும் சிக்கலானவை என்பதால், ஆதாரங்களை அழித்தவர்களை அடையாளம் காண நேரம் எடுக்கலாம் என்றும், விசாரணைகள் இடையூறு இன்றி தொடரும் என்றும் அவர் கூறினார்.

விசாரணைக்கு பாதிப்பு ஏற்படக் கூடும் என்பதால் சில விவரங்களை தற்போது வெளியிட முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த விசாரணைகளின்

07

# டக்ளஸ் பிணையில் விடுவிப்பு!

கொழும்பு, ஜன. 10

முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை பிணையில் செல்ல கம்பஹா நீதவான் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.

2001ஆம் ஆண்டு அவரது தனிப்பட்ட பாவனைக்காக இராணுவத்தினால் வழங்கப்பட்ட துப்பாக்கி ஒன்று, 2019ஆம் ஆண்டு திட்டமிட்ட குற்றவாளியான மாகந்துர மதூஷிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது மீட்கப்பட்டது. இந்த சம்பவத்துடன் தொடர்புடைய விசாரணைகளுக்காக அவர் கடந்த மாதம் 26ஆம் திகதி

07

# பாடசாலை பாடத் திட்டங்களில் இணையத்தள இணைப்பு நீக்கம்

## சபையில் அறிவித்தார் பிரதமர்

கொழும்பு, ஜன. 10

இரண்டாம் மற்றும் மூன்றாம் பாடசாலைத் தவணைகளுக்குரிய கற்றல் தொகுதிகளை தயாரிக்கும்போது, இனிவரும் காலங்களில் எந்தவொரு தரத்திற்கும் இணையத்தள இணைப்புகளை உள்ளடக்கக்கூடாது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இதனை கூறினார்.

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார்

07

# தமிழர் வரலாறை பாடப்புத்தகங்களில் மீண்டும் சேர்க்க நடவடிக்கை வேண்டும்

## தமிழரசுக்கட்சி பிரதமரிடம் கோரிக்கை

கொழும்பு, ஜன. 10

தமிழ் மொழி மூல வரலாற்று நூல்கள் மற்றும் பாடத்திட்டங்களில் தமிழர்களின் வரலாறுகள் நீக்கப்பட்டுள்ளமை பற்றி பிரதமரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. அவற்றினை மீண்டும் பாடப்புத்தகங்களில் கொண்டுவர வேண்டும் என தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரிடம் கோரிக்கை விடுத்தனர்.

வடக்கு மற்றும் கிழக்கு பல்கலைக்கழகங்கள்

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவேந்தல் இன்று முற்றவெளியில்!

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற 4ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 52 ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்று சனிக்கிழமை இடம் பெறவுள்ளது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் முற்றவெளியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவாலயத்தில் நினைவேந்தல் உணர்வுபூர்வமாக இடம்பெறவுள்ளது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் பொதுமக்களையும் கட்சி உறுப்பினர்களையும் ஆதரவாளர்களையும்

கலந்துகொண்டு அஞ்சலியை செலுத்தவேண்டுமென இலங்கை தமிழ் அரசுக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதிவரை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது உலக ஆராய்ச்சி மாநாட்டில் ஏற்பட்ட கலவரத்தில் ஒன்பது பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தவிடாமல் அப்போதைய சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசு, பொலிஸாரை அனுப்பி கலவரத்தை ஏற்படுத்தியது.

இதன்போது ஒன்பது தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அதுட்டுமன்றி தமிழர்கள் மனத்தில் நீங்காத வடுக்களாக இந்தப் படுகொலைச் சம்பவம் பதியப்பட்டது என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.(அ)

# யாழ்ப்பாண கரைவரை அத்துமீறி நுழைந்துவரும் இந்திய மீனவர்கள்

**கடற்படை நடவடிக்கை இல்லை என குற்றச்சாட்டு**


யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ்ப்பாணத்தில் நிலவும் சீரற்ற கால நிலையில் கடல் கொந்தளிப்பாக காணப்படுவதனால், கடற்தொழிலாளர்கள் கடலுக்கு செல்லாத நிலைமையை தமக்கு சாதகமாக பயன்படுத்தி யாழ்ப்பாண கரை வரை இந்திய கடற்தொழிலாளர்கள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டுள்ளமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கடற்பரப்புக்களில் கரையை அண்மித்த பகுதி வரை இந்திய கடற்தொழிலாளர்கள் அத்துமீறி நுழைந்து கடற்தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பில் கட்டைக்காடு கடற்தொழிலாளர்களால் வெற்றிலைக்கேணி கடற்படையினருக்கு அறிவித்தபோதிலும் கடற்படையினர் நடவடிக்கை எடுக்கவில்லை என குற்றம் சாட்டப்படுகின்றது.

அதேவேளை சீரற்ற கால நிலையால் கடல் கொந்தளிப்பு அதிகமாக உள்ளதால் , கடற்தொழிலாளர்கள், கடற்படையினர் உள்ளிட்ட எவரையும் கடலுக்குச் செல்லவேண்டாம் என வானிலை அவதானிப்பு மையம் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



# கிளிநொச்சி அரச அதிபர் உள்ளிட்ட குழு நேற்று அனர்த்த முன்னாயத்த கள விஜயம்

கிளிநொச்சி, ஜன. 10

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், புதிதாக பதவியேற்ற 55 ஆவது காலாட்படை படைப்பிரிவின் தளபதி, அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் உள்ளிட்ட குழுவினர் அனர்த்த முன்னாயத்தத்திற்கான கள விஜயத்தை மேற்கொண்டனர்.

அனர்த்தத்திற்கான எதிர்வு கூறலைத் தொடர்ந்து முன்னாயத்த நிலைமைகளை மேற்கொள்வதற்கான கள விஜயமாக இது அமைந்திருந்தது.

அந்தவகையில் முதலாவதாக வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு திருத்தியமைக்கப்பட்ட வட்டக்கச்சி வீதியின் நிலைமைகளை பார்வையிட்டனர்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், 55 வது காலாட்படை படைப்பிரிவின் தளபதி மற்றும் அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர், 55 ஆவது காலாட்படை படைப்பிரிவு மற்றும் 551 காலாட்படைபிரிவின் இராணுவத்தினர் இந்த கள விஜயத்தினை மேற்கொண்டனர். (அ)

# கிளிநொச்சியில் ஆட்டு திருடர்கள் பொலிஸாரிடம் வசமாக சிக்கினர்

கிளிநொச்சி, ஜன. 10

கிளிநொச்சி மாவட்டம் தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பல பகுதிகளில் இரவு வேளைகளில் வீதிகள் மற்றும் ஆள் நடமாட்டம் அற்ற பகுதிகளில் உள்ள ஆடுகளை திருடிச் சென்ற திருடர்கள் பொலிஸாரிடம் சிக்கினர்.

வளர்ப்பு ஆடுகள் காணாமல் போன நிலையில் ஆட்டின் உரிமையாளர்களால் வழங்கப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வந்த பொலிஸார் நேற்று முன்தினம் இரண்டு சந்தேக நபர்களை கைது செய்தனர்.

குறித்த சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் மோட்டார் சைக்கிளில் இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிக்கு ஆடுகளை கடத்திச்சென்று, ஆட்டின் பெறுமதியை விட அரைவாசி விலைக்கு விற்று வந்தமை தெரியவந்தது.

இதனையடுத்து 05 ஆடுகள், உரிமையாளரினால் இனங்காட்டப்பட்டதை அடுத்து தருமபுரம் பொலிஸாரால் குறித்த ஐந்து ஆடும் மீட்கப்பட்டுள்ளன. சந்தேக நபர்களிடம் தர்மபுரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# அனர்த்த நிலைமை தொடர்பில் வவுனியாவில் கலந்துரையாடல்

வவுனியா, ஜன. 10

தற்போது நிலவும் பாதகமான வானிலை காரணமாக வடக்கு மாகாணத்தில் கன மழை பெய்யும் என்று நம்பப்படுகிறது. நிலைமையை சமாளிப்பது மற்றும் அனர்த்த நிலைமையைக் கட்டுப்படுத்துவது குறித்த சிறப்பு கலந்துரையாடல் நேற்று காலை வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க மற்றும் மாவட்ட செயலாளர் பி.ஏ. சரத்சந்ர தலைமையில் இந்த சிறப்பு கலந்துரையாடல் நடைபெற்றது.

அவசரகால அனர்த்த நிலைமை ஏற்பட்டால் மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களைக் குறைப்பது குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக, இராணுவம், பொலிஸ், சிவில் பாதுகாப்புத் துறை, விமானப்படை மற்றும் கடற்படையை தயார் நிலையில் வைத்திருப்பது, அத்துடன் வரவிருக்கும் அனர்த்த நிலைமை குறித்து மிகுந்த கவனம் செலுத்துவது மற்றும் குளங்களில் நீர் மட்டத்தைக் கட்டுப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

அனைத்து அரசு நிறுவனங்களும் அதிகாரிகளும் அடுத்த 24 மணி நேரத்துக்கு மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் என்றும், அவசரநிலை ஏற்பட்டால் மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கப்படவேண்டும் என்றும் விவாதிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், பாதுகாப்புப் படையினர் மற்றும் தொடர்புடைய அரசு நிறுவன அதிகாரிகள் கலந்து கொண்டனர். (அ)

# அவசரமாக தரையிறங்கிய விமானம்!

கொழும்பு, ஜன. 10

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து குவைத் நோக்கி சென்ற சிறிலங்கன் விமான சேவை நிறுவனத்துக்குச் சொந்தமான யுஎல்-229 என்ற விமானம் இடைநடுவில் திருப்பி அழைக்கப்பட்டது. விமானத்தில் ஏற்பட்ட தொழிநுட்பக் கோளாறு காரணமாக குறித்த விமானம் புறப்பட்டு 2 மணித்தியாலங்கள் 21 நிமிடங்களின் பின்னர் மீண்டும் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கே திருப்பி அழைக்கப்பட்டது.

இந்த விமானம் நேற்று முன்தினம் மாலை 6.44 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து குவைத் நோக்கிப் புறப்பட்டது.

எனினும், விமானத்தின் ஹைட்ரோலிக் அமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, விமானி இது குறித்து கட்டுநாயக்க விமான நிலையக் கட்டுப்பாட்டு அறைக்குத் தெரியப்படுத்தினார். அதனைத் தொடர்ந்து விமானத்தை மீண்டும் திருப்புமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

இதற்கமைய செயற்பட்ட விமானி, நேற்று முன்தினம் இரவு 9.05 மணியளவில் விமானத்தைப் பாதுகாப்பாகக் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறக்கினார்.

சம்பவத்தின்போது விமானத்தில் 179 பயணிகளும் 8 விமானப் பணியாளர்களும் இருந்துள்ளனர். அவர்கள் அனைவரும் எவ்வித ஆபத்துமின்றிப் பாதுகாப்பாகத் தரையிறங்கியுள்ளனர்.

இந்நிலையில், விமானப் பயணிகளை மாற்று விமானங்கள் ஊடாக குவைத்துக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கன் விமான சேவைகள் நிறுவனத்தின் கூட்டமைப்புத் தொடர்பாடல் பிரிவின் தலைவர் தீபால் பெரேரா தெரிவித்தார். (அ)

# மருதங்கேணியில் அதிக நேரம் காத்திருக்கும் இ.போ.ச. பேருந்து!

**மக்கள் கடும் விசனம்**

யாழ்ப்பாணம், ஜன. 10

பருத்தித்துறை பகுதியிலிருந்து காலை 8.30 மணிக்கு கேவில் நோக்கி புறப்படும் அரச பேருந்து மருதங்கேணியில் 40 நிமிடங்களுக்கு மேலாக தரித்து நிற்பதால் பயணிகள் பாதிப்பு அடைந்துவருவதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறையிலிருந்து கேவில் நோக்கி காலை 8.30 மணிக்கு புறப்படும் அரச பேருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு மருதங்கேணி பகுதிக்கு வருகை தந்து அங்கே 40 நிமிடங்களுக்கு மேலாக மேலதிகமாக தரித்து நிற்கின்றது.

இதனால் உரிய நேரத்துக்கு செல்லவேண்டிய மக்கள், வேலை ஆட்கள், மாணவர்கள் பாதிப்படைகின்றனர்.

குறித்த அரச பேருந்து அதிக நேரம் காத்திருப்பதால் ஏனைய பேருந்துகள் மற்றும் ஓட்டோ சாரதிகள் பாதிப்படைகின்றனர்.

நேரத்தை கடைப்பிடிக்காமல் மக்களை அலைக்கழிக்கும் அரச பேருந்து மீது நடவடிக்கை எடுக்குமாறும் இலங்கை போக்குவரத்து சபை இது தொடர்பில் அவதானம் செலுத்துமாறும் பயணிகள் கேட்டுள்ளனர். (அ)

# மகசீன் சிறைக்கு சென்ற சிறீபவானந்தராசா எம்.பி.

கொழும்பு, ஜன. 10

கொழும்பு மகசீன் சிறைச்சாலைக்கு நேற்று முன் தினம் வியாழக்கிழமை சென்ற யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகநாதன் சிறீபவானந்தராசா தமிழ் அரசியல் கைதிகளை சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்து கொண்டார்.

அதன்போது அரசியல் கைதிகள் எதிர்நோக்கும் பிரச்னைகள், குறைகளை கேட்டறிந்த பாராளுமன்ற உறுப்பினர், அரசியல் கைதிகள் முன் வைத்த கோரிக்கைகள் பிரச்னைகள் தொடர்பில் உரிய தரப்பினருடன் பேசி தீர்வை பெற்றுத் தர விரைந்து நடவடிக்கை எடுப்பேன் என கைதிகளுக்கு உறுதியளித்துள்ளார். (அ)

# காலாவதியான அனுமதிப்பத்திரம் மூலம் கடத்தி வரப்பட்ட மரக்குற்றிகள் சிக்கின!

யாழ்ப்பாணம், ஜன. 10

காலாவதியான அனுமதிப் பத்திரத்தை பாவித்து கடத்தி வரப்பட்ட 30 இலட்சம் ரூபா பெறுமதியான மரக்குற்றிகளை சாவகச்சேரி பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

நேற்றுக் காலை ஏ-9 வீதி கைதடிப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மரக்குற்றிகளை ஏற்றிவந்த ஹன்ரர் வாகனத்தை மறித்து சோதனையிட்டனர்.

இதன்போது, காலாவதியான அனுமதிப் பத்திரத்தை பாவித்து மரக்கடத்தலில் ஈடுபட்டமை தெரியவந்த நிலையில் தேக்கு, வேம்பு போன்ற மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டன.

அதன் பின்னர், வாகனத்தையும், மரக்குற்றிகளையும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுவந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
10.01.2026 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், மார்கழி 25

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## பிரதமருக்கு எதிரான குரல்கள்?

பிரதமர் ஹரிணி அமரசூரிய தொடர்பில் பலவாறான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. அவர் பதவி விலகவேண்டும் என்றும் எதிரணியைச் சேர்ந்தவர்கள் கூறுகின்றனர். நாட்டு பற்றாளர்கள் என்னும் பிக்குகளும் அவருக்கு எதிராக கடுமையாக பேசுகின்றனர். கல்விச் சீர்திருத்தத்தில் சேர்க்கப்பட்ட ஒரு சில விடயங்கள்தான் அனைத்து பிரச்னைக்குமான காரணம்.

ஆறாம் ஆண்டு பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்ட இணைப்புக்களில் பாலியல் தொடர்பான ஒரு இணையத்தளம் சேர்க்கப்பட்டிருக்கின்றது என்பதே இந்த எதிர்ப்புக்களுக்கான காரணமாகும். ஆனால் பாடத்திட்டத்தை தயாரித்த குழுவினர் தவறுதலாக அதனைச் சேர்த்துவிட்டதாக பிரதமர் தரப்பால் கூறப்படுகின்றது ஆனால் இது நாட்டின் கலாசாரத்தை கேள்விக்குள்ளாக்கிவிட்டதாக எதிர்த்தரப்பில் கூறப்படுகின்றது. அரசாங்கத்தை எதிர்ப்பதற்கு காரணம் தேடிக் கொண்டிருந்தவர்களுக்கோ மெல்லுவற்கு அவல் கிடைத்த கதையாகிவிட்டது.

இதனைத் தொடர்ந்து பிரதமர் ஹரிணி இது தொடர்பில் விளமளித்து வருகின்றார். இது தொடர்பில் அவர் மகாநாயக்க தேரர்களுக்கு விளக்கமளித் திருக்கின்றார். அரசியலில் ஒருவரை எதிர்ப்பதற்கு எந்த எல்லைக்கும் செல்வதும், அதற்காக கீழ்த்தரமான விமர்சனங்களை முன்வைப்பதும் தென்னிலங்கை அரசியலுக்கு புதிது அல்ல. ரணில் விக்கிரமசிங்க அதேபோன்று காலம் சென்ற வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோர் தொடர்பிலும் தென்னிலங்கை அரசியலில், அவர்களுடைய எதிரிகளால் பலவாறான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை எதிர்ப்பதற்கு என்னவெல்லாம் கையில் கிடைக்கின்றதோ அதனை பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று எதிரணியினர் கருதுகின்றனர். இந்தப் பின்புலத்தில்தான் ஹரிணி அமரசூரியவின் விடயத்தை கையிலெடுத்திருக்கின்றனர். அதிகாரத்தை கைப்பற்றும் நோக்கத்திற்கு முன்னால் ஒழுக்கம், நேர்மை, நாகரீகம் என்பதெல்லாம் பெறுமதியற்ற சொற்களாகிவிடுகின்றன. மக்களும் அது பற்றிக் கவலைப்படுவதில்லை.

ஹரிணி தொழில் முறை அரசியல்வாதி அல்ல. அரசு சாரா நிறுவனங்கள், பெண்ணிய அமைப்புக்கள் வழியாக இயங்கிவந்த அவரை, ஜே.வி.பிதான் அரசியலுக்குள் கொண்டு வந்தது. ஆனால் அவர் ஜே.வி.பியாக அரசியலுக்கு வரவில்லை. தேசிய மக்கள் சக்தியாகவே வந்திருக்கின்றார். சமூகம் தொடர்பிலும், சமூகத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பிலும் அவரிடம் சில பார்வைகள் இருக்கலாம் ஏனெனில் அவர் அடிப்படையில் தாராளவாத மேற்குலக சிந்தனைகளுக்கு சார்பான ஒருவர்.

இன்றைய நிலையில் ஜே.வி.பியின் கடந்தகால தீவிரவாத முகத்தை மறைத்து, அவர்களுக்கு ஒரு தாராளவாத முகத்தை வழங்குவதல் ஹரிணிக்கு பிரதான இடமுண்டு. அதே வேளை இலங்கையின் பாரம்பரிய பிரதமர்களிலிருந்தும் அவர் வேறுபட்டிருக்கின்றார். தன்னை ஒரு சாதாரண நபராகவே அடையாளப்படுத்திக் கொள்கின்றார். இதன் காரணமாகவே அவர் வெளிநாடுகளுக்குச் செல்லும்போது சேலை கட்டுவதில்லை என்னும் விமர்சனமும் முன்வைக்கப்பட்டது.

கல்விச் சீர்திருத்தம் தொடர்பில் ஆசிரியர் சங்கங்களின் மத்தியிலும் விமர்சனங்கள் உண்டு. அதாவது, தங்களுடன் இது தொடர்பில் முறையாக கலந்துரையாடவில்லை என்னும் குற்றச்சாட்டை முன்வைக்கின்றனர். கல்விச் சீர்திருத்தம் தொடர்பில் முன்னைய ஆட்சியாளர்களும் பேசியிருக்கின்றனர். ஆனால் அதனை அமுல்படுத்தவில்லை. இந்த நிலையில்தான் தேசிய மக்கள் சக்தி இதனை நடைமுறைப்படுத்த முயற்சிப்பதாக அரசாங்கம் கூறுகின்றது. ஹரிணிக்கு எதிரான குற்றச்சாட்டுக்களின் மத்தியிலும் அரசாங்கம் இதிலிருந்து பின்வாங்கப் போவதில்லை என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்திருக்கின்றார்.

இலங்கையில் எந்தவொரு விடயமும் சிங்கள பௌத்தத்தோடு தொடர்புபடுத்தப்படும் போது, அது சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றது. இதுதான் தொடர்கதையென்றால், இந்த நாட்டில் எந்தவொரு ஆக்கபூர்வமான மாற்றங்களும் சாத்தியமில்லை என்றுதானே பொருள். கலாசராம், நாகரீகம் பற்றி பேசப்படும் இந்த நாட்டில், அதனை மோசமாக மீறும் பிக்குகளும் இருக்கின்றனர். அவ்வாறான பிக்குகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு எந்தவொரு கலாசாரக் காவலரும் கூறுவதில்லை.

# 6ஆம் வகுப்பு பாடத்திட்ட பிரச்னையின் பின்னணியில் அரசு சாரா அமைப்புகள்

கொழும்பு, ஜன. 10

ஆறாம் வகுப்பு பாடத்திட்டம் தொடர்பான பிரச்னையின் பின்னணியில் தர்ஷன சமரவீர என்ற அதிகாரியும், ஒரு சில ஓரினசேர்க்கை கருத்துகளை ஊக்குவிக்கும் அரசு அல்லாத அமைப்புகளும் உள்ளதாக, எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

"இந்த தர்ஷன சமரவீர என்ற அதிகாரி என்.பி.பியுடன் தொடர்புடையவர். அவரது மகள் பன்னல பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிட்டுள்ளார். இந்த அதிகாரி, அனுராதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் குழுவுடன் இணைந்து இந்த பாடத்திட்டத் தொகுப்பை தயாரித்துள்ளார். ஆனால் இதில் பாலியல் கல்வி தொடர்பான பிரச்சினைகளுடன் சேர்த்து, பல இலக்கணப் பிழைகளும் காணப்படுகின்றன," என தயாசிறி ஜயசேகர வெளிப்படுத்தினார்.

இன்றுவரை தர்ஷன சமரவீரவை சி.ஐ.டி. விசாரணைக்கு அழைக்காததேன் என்று ஜயசேகர கேள்வி எழுப்பினார்.

"மற்ற அதிகாரிகள் தினந்தோறும் சி.ஐ.டிக்கு அழைக்கப்படுகின்றனர். ஆனால் சமரவீர மட்டும் விடுவிக்கப்பட்டுள்ளார்,"-என்றார்.

மேலும், ஓரினச் சேர்க்கை கருத்துகளை ஊக்குவிக்கும் சில அமைப்புகளும் இந்த பிரச்னையின் பின்னணியில் உள்ளதாக அவர் கூறினார்.

அத்துடன், அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகளில் 16 வயதுக்குக் குறைந்த குழந்தைகள் சில இணையத்தளங்களில் உள்நுழைவது தடை செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

"பின்லாந்து போன்ற நாடுகளில், ஆசிரியர்களுக்காக உருவாக்கப்பட்ட ஒரு சிறப்பு தளத்தின் மூலம் மட்டுமே குழந்தைகள் இணையத்தளங்களை அணுக அனுமதிக்கப்படுகின்றனர்.

இலங்கை அரசும் இவ் விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும்," என அவர் வலியுறுத்தினார்.

(அ)

# டித்வா புயலால் 177,000 இற்கும் மேற்பட்டோர் இன்னும் உறவினர் நண்பர்களின் வீடுகளில்!

கொழும்பு, ஜன. 10

டித்வா புயல் காரணமாக, 177,000 இற்கும் மேற்பட்டோர் தங்கள் சொந்த வீடுகளை இழந்து அல்லது திரும்ப முடியாமல், உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளில் தங்கி வருகின்றனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நிலையம் வெளியிட்ட அறிக்கையில்-

52,194 குடும்பங்களில் சேர்ந்த 177,423 பேர், தங்கள் சொந்த வீடுகளை இழந்து அல்லது திரும்ப முடியாமல், உறவினர்கள், நண்பர்கள் அல்லது பிற இடங்களில் தங்கி, பெரும்பாலும் ஒரே வீட்டில் கூடி வசிக்கின்றனர்.

மேலும், கடுமையாக பாதிக்கப்பட்ட பகுதிகளில், நிலைமைகள் இன்னும் பாதுகாப்பற்றவை என்பதால் 6,074 குடும்பங்களில் சேர்ந்த 19,340 பேர் 205 நிவாரண மையங்களில் தங்கி வருகின்றனர்.

நவம்பர் 16 ஆம் திக்தி தொடங்கிய மோசமான வானிலை காரணமாக, நாட்டில் 77,793 குடும்பங்களைச் சேர்ந்த 258,967 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புயல் காரணமாக 6,025 வீடுகள் முழுமையாக அழிந்துள்லதோடு, 108,591 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.-என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# துல்லியமான தகவல்கள் பொதுமக்களை சென்றடைவதில் உறுதியாக உள்ளோம்!

### ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, ஜன. 10


பொதுமக்களிடம் துல்லியமான தகவல்கள் பரவச் செய்வதில் தாம் உறுதியாக உள்ளதாக ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சில தொலைக்காட்சி அலைவரிசைகளின் அனுமதிப் பத்திரங்களை இரத்து செய்ய அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை குறித்து எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போது அமைச்சர் இதனை கூறினார்.

மேலும், சுகாதாரம் தொடர்பாக தவறான தகவல்களை ஒளிபரப்பிய அந்தத் தொலைக்காட்சி அலைவரிசை, தற்போது அந்தத் தகவலைத் திருத்தி வெளியிட்டுள்ளதாகவும் அமைச்சர் ஜயதிஸ்ஸ கூறினார்.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். விருந்தினர்களின் வருகையால் வீடு களைகட்டும். வியாபாரத்தில் புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். மேலதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள்.

**இடபம்:** குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். உறவினர்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் புது தொடர்புகள் கிடைக்கும். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்று கொள்வீர்கள்.

**மிதுனம்:** முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. மகளுக்கு நல்ல வரன் அமையும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

**கடகம்:** குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். அதிகாரிகள் நினைப்பதை முடித்துக் காட்டுவீர்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**சிம்மம்:** கணவன்-மனைவிக்குள் பிணக்குகள் நீங்கும். தள்ளிப் போன விஷயங்கள் உடனே முடியும். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

**கன்னி:** ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பழைய கசப்பான சம்பவங்களைப் பற்றி யாரிடமும் விவாதிக்க வேண்டாம். வியாபாரத்தில் கடன் தர வேண்டாம். சிக்கனம் தேவைப்படும் நாள்.

**துலாம்:** திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி இருக்கும். வாகனம் பழுதாகும். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். பணிகளை போராடி முடிப்பீர்கள். நிதானம் தேவைப்படும் நாள்.

**விருச்சிகம்:** உங்களின் அணுகு முறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றி கொள்வீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**தனுசு:** நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர், நண்பர்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும்.

**மகரம்:** குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பம் விலகும். மகிழ்ச்சியான நிலை உருவாகும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். தடைப்பட்ட வேலைகள் முடியும்.

**கும்பம்:** சந்திராஷ்டமம் இருப்பதால் பழைய பிரச்னைகள் தலைதூக்கும். வியாபாரத்தில் புது முடிவுகளை தவிர்க்கவும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். போராட்டமான நாள்.

**மீனம்:** தன்னம்பிக்கையுடன் எதையும் செய்ய தொடங்குவீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களை உணர்வீர்கள். உத்தியோகத்தில் அமைதி நிலவும். திறமைகள் வெளிப்படும் நாள்.

# குப்பைகளை அகற்றுவதற்கு பின்னடிக்கும் பிரதேச சபை

## வடமராட்சி கிழக்கில் நோய் பரவும் அபாயம்

யாழ்ப்பாணம், ஜன. 10

வடமராட்சி கிழக்கு கரையோர பகுதிகள் குப்பைக்காடாக காட்சியளிக்கின்றன.

கடந்த ஆண்டு ஏற்பட்ட டித்வா புயல் காரணமாக பெருமளவான குப்பைகள் வீடுகளுக்குள் அடித்து வரப்பட்டன.

இதனை உடன் அகற்றுமாறு அல்லது எரியூட்டுமாறு உரிய தரப்பினருக்கு பொதுமக்களால் தொடர்ச்சியாக கோரிக்கை முன்வைக்கப்பட்டு வந்தன.

குப்பைகள் அகற்றப்படுமென பிரதேச சபையால் தெரியப்படுத்தப்பட்ட போதும் பல நாட்கள் கடந்தும் பிரதேச சபையால் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

குப்பைகள் வடமராட்சி கிழக்கின் பல பகுதிகளிலும் தேங்கிக் காணப்படுகின்றன.

இதனால், டெங்கு போன்ற நோய்கள் பரவுவதற்கான அறிகுறிகள் குறித்த பிரதேசத்தில் நிலவுகின்றது.

யாழ். மாவட்டத்தில் மீண்டும் பலத்த மழை பெய்யும் என்று வானிலை ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே, குப்பைகள் அகற்றப்படாமல் அதே இடத்தில் இருப்பதால் மக்கள் தொடர்ந்தும் நோய்களால் பாதிப்படைவதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் தேங்கிக் கிடக்கும் குப்பைகளை உடன் அகற்றுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(எ-08)

# வடக்கில் 100 மில்லி மீற்றரிலும் கூடிய பலத்த மழை பெய்யும்

கொழும்பு, ஜன. 10

வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் மாத்தளை, திருகோணமலை மற்றும் புத்தளம் மாவட்டங்களின் சில இடங்களிலும் 100 மில்லி மீற்றரிலும் கூடிய பலத்த மழை பெய்யக் கூடும். கண்டி, நுவரெலியா மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் சில இடங்களில் 50 - 75 மில்லி மீற்றர் வரையிலான ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மத்திய மலைப் பிராந்தியங்களின் கிழக்கு சரிவுகளிலும் வடக்கு, கிழக்கு, வடமத்திய, மத்திய, வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களிலும் அத்துடன் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலும் மணித்தியாலத்துக்கு 50 - 60 கிலோ மீற்றர் வேகத்தில் அடிக்கடி பலத்த காற்று வீசக் கூடும். காற்றின் வேகம் மணிக்கு 70 கிலோ மீற்றராக அதிகரித்து காணப்படும்.

பலத்த காற்று மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொது மக்கள் அவதானத்துடன் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நாட்டைச் சூழவுள்ள ஆழமான மற்றும் ஆழமற்ற கடல் பிராந்தியங்களுக்கு மறுஅறிவித்தல் வரையில் மீனவர்களும் கடல்சார் ஊழியர்களும் செல்ல வேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும் வளிமண்டலவியல் திணைக்களத்தால் வழங்கப்படுகின்ற எதிர்வு கூறல்களை கவனத்தில் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சிலாபம் தொடக்கம் மன்னார், காங்கேசன்துறை, திருகோணமலை, பொத்துவில் ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடல் பிராந்தியங்களில் அடிக்கடி மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடல் பிராந்தியங்களின் பல இடங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

# தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தால் உலருணவு பொதிகள் விநியோகம்



யாழ்ப்பாணம், ஜன. 10

தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் இயற்கை பேரிடர்கள் உட்பட பல்வேறு காரணங்களால் பொருளாதார ரீதியாக நலிவடைந்த குடும்பங்களுக்கு ‘அற்றார் அழிபசி தீர்த்தல்’ என்ற திட்டத்தின் கீழ் உலருணவு பொதிகளை வழங்கி வருகின்றது. ‘பகிர்ந்துண்டு வாழ்வோம்’ என்ற கருப்பொருளில் முன்னெடுக்கப்பட்டுவரும் இந்தத் திட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் அராலி மற்றும் உடுவில் பகுதிகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 75 குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன.

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில் அத்தியாவசிய உலருணவுகள் அடங்கிய பொதிகளை பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் பயனாளிகளுக்கு கையளித்துள்ளார். இதற்கான நிதி அனுசரணையை கனடாவில் உள்ள யாழ். கந்தர்மடம் மக்கள் ஒன்றியம் வழங்கியிருந்தது.

(எ)

# யாழ்ப்பாண பிரதேச செயலகத்துக்கு புதிய உதவி செயலாளர் நியமனம்



யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்துக்கு புதிய உதவி பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்ட திருமதி துஷியா கஜமுகன் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனிடம் தனக்கான நியமனக் கடிதத்தை பெற்றுக்கொண்டார்.

இவர் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் தமது கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித்தின் முன்மொழிவுகளுக்கு ஐ. தே. க. செயல்குழு இணக்கம்

## தவிசாளர் வஜிர தகவல்

கொழும்பு, ஜன. 10

ஐக்கிய தேசிய கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி இணைந்து செயல்பட சஜித் பிரேமதாஸவால் முன்மொழியப்பட்ட விடயங்களுக்கு கட்சியின் செயல்குழுவில் இணக்கப்பாடு எட்டப்பட்டதாக ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அரசியல் பணிமனையில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சியின் செயல்குழு கூடியது. இதன்போது, ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி அகிய இரண்டு கட்சிகளுக்கிடையில் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய முறை தொடர்பில் நீண்ட நேரம் ககலந்துரையாடப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவின் அழைப்பின் பேரில், ஐக்கிய தேசியக் கட்சியின் செயல்குழு உறுப்பினர்கள் சிலர் அண்மையில் சந்தித்து கலந்துரையாடினர். இதன்போது, சஜித் பிரேமதாஸ முன்மொழிந்த விடயங்கள் செயல்குழுவுக்கு தெரிவிக்கப்பட்டன.

இதன்படி, இரு கட்சிகளும் இணைந்து செயல்பட முன்வைக்கப்பட்ட கருத்துகளுக்கு இணக்கம் எட்டப்பட்டது. அத்துடன், சில விடயங்களை ஐக்கிய மக்கள் சக்தி கட்சிக்கு தெரிவிக்கவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஐக்கிய தேசிய கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றாக இணைந்து செயல்படுவதற்கு எந்த தடைகளும் இல்லை. தலைமைத்துவம் தொடர்பாக பிரச்னை எழப்போவதில்லை என்பதை உறுதியாக தெரிவிக்க முடியும் - என்றார். (ஐ)

# யாழ்ப்பாணம் உட்பட இடங்களில் டெங்கு நோய் பரவல் அதிகரிப்பு!

கொழும்பு, ஜன. 10

டித்வா சூறாவளி தாக்கத்தையடுத்து நாட்டில் டெங்கு காய்ச்சல் பரவல் அதிகரித்துள்ளது. இந்த ஆண்டின் முதல் 6 நாட்களில் மாத்திரம் ஆயிரத்து 598 டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர்.

டெங்கு நோயால் நாளொன்றுக்கு சராசரியாக 250இற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்படுகின்றனர் என்று தெரிவித்துள்ள சமூகநல மருத்துவ நிபுணர் பிரஷிலா சமரவீர, சூறாவளியைத் தொடர்ந்து தற்காலிக முகாம்களில் புகை விசிறல் மற்றும் முறையான கழிவு மேலாண்மைப் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

மேலும், காய்ச்சல் அறிகுறிகள் தென்பட்டால் நோயாளிகள் தாமாகவே மருந்துகளை உட்கொள்வதைத் தவிர்க்க வேண்டும் என்றும், காய்ச்சல் இரண்டு நாட்களுக்கு மேல் நீடித்தால் உடனடியாகத் தகுதி வாய்ந்த மருத்துவரை அணுகி சிகிச்சை பெற வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கண்டி, காலி, இரத்தினபுரி போன்ற மாவட்டங்களில் டெங்கு நோய் பரவல் அதிகரித்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

# மாணவர்களுக்கான சீருடைகள் இந்த மாத்துக்குள் வழங்கப்படும்

கொழும்பு, ஜன. 10

நடப்பு ஆண்டுக்கான பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடசாலை சீருடை இந்த மாதத்துக்குள் விநியோகிக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இதன்படி, 44 இலட்சத்து 18 ஆயிரத்து 404 மாணவர்களுக்கு இம்முறை இலவச சீருடை வழங்கப்படவுள்ளது.

அரச மற்றும் அரச அனுசரணையின் கீழ் இயங்கும் பாடசாலை மாணவர்கள், அரச அங்கீகாரம் பெற்ற பிரிவெனாக்களில் கல்வி கற்கும் பிக்கு மாணவர்கள் உள்ளிட்டோருக்கு இலவச சீருடை வழங்கப்படவுள்ளது.

சீன மக்கள் குடியரசின் முழுமையான அன்பளிப்பாக 11.484 மில்லியன் மீற்றர் சீருடைத் துணிகள் நாட்டை வந்தடைந்துள்ளன. இவற்றை எதிர்வரும் 13ஆம் திகதி கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் பொறுப்பேற்பார். (ஐ)

# வீடுகளை இழந்தோருக்கு வழங்க 10 ஏக்கர் காணி அன்பளித்த தேரர்

கொழும்பு, ஜன. 10

டித்வா சூறாவளியால் வீடுகளை இழந்த மக்களுக்கு வழங்குவதற்காக 10 ஏக்கர் காணியை தேரர் ஒருவர் நன்கொடை அளித்துள்ளார்.

சியாம்பலபிட்டி யட்டோகொடை ரஜமகா விகாரையின் சத்தர்ம விசாரத மாவீகந்தே ரதனபால தேரரே இவ்வாறு காணிகளை நன்கொடை அளித்துள்ளார்.

மக்களுக்கு வழங்குவதற்காக அவர் சியம்பலாபிட்டியிலுள்ள தனக்கு சொந்தமான 10 ஏக்கர் காணிக்கான ஆவணங்களை ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்கவிடம் கடந்த புதன்கிழமை கையளித்தார். (ஐ)

# ஓட்டிசம் பாதித்த குழந்தைகள்மீது விசேட கவனம் செலுத்த நடவடிக்கை

## சுகாதார அமைச்சர் நளிந்த

கொழும்பு, ஜன. 10

மதியிறுக்கம் ( ஓட்டிசம்) நோயால் பாதிக்கப்பட்டுள்ள பிள்ளைகளை பாதுகாப்பதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. விசேட பாதுகாப்பு மத்திய நிலையங்களை நிர்மாணிக்கவும் அவர்களுக்குரிய மருத்துவ வசதிகளை வழங்கவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்காக மாவட்ட மட்டத்தில் விசேட செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சுகாதாரத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், மதியிறுக்க நோயால் அவதியுறும் பிள்ளைகளை முற்கூட்டியே கண்டறிந்து சிகிச்சையளிக்கும் செயல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக வடக்கில் இரு மருத்துவமனைகளும், கிழக்கில் 3, மேல் மாகாணத்தில் 16, , மத்திய மாகாணத்தில் 9, தெற்கு, சப்ரகமுவ, வடமேல் மாகாணங்களில் தலா 7 மருத்துவமனைகளும் வடமத்திய, ஊவா மாகாணங்களில் தலா 2 மருத்துவமனைகள் என்ற அடிப்படையில் 55 மருத்துவமனைகளில் குழந்தை நல மருத்துவ நிபுணர்கள் பணியாற்றுகின்றனர். இவ்வாறான 20 மருத்துவமனைகளில் மதியிறுக்க நோய்க்கு கிளினிக் இயங்குகிறது.

இந்த மருத்துவமனைகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிக்காக 20 கோடி ரூபாய் கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு 10 கோடி ரூபாய் மேலதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது - என்றும் கூறினார். (ஐ)

# பெற்றோரின் தகராறில் மகளுக்கு கத்திக்குத்து!

கொழும்பு, ஜன. 10

கணவன், மனைவியின் தகராறில் அவர்களின் 12 வயதான மகள் கத்திக்குத்துக்கு உள்ளாகி காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை பொலநறுவை, ஹிங்குராங்கொட, தெபரெல்ல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

தகராறில் கணவன் மனைவியை கத்தியால் குத்த முயன்றபோது 12 வயது மகள் தடுக்க முயன்றுள்ளார். அப்போதே, அவர் கத்திக்குத்துக்கு உள்ளாகி காயமடைந்தார் என்று பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

காயமடைந்த சிறுமி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவரின் தந்தையான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதுளை மாவட்டத்தின் அனைத்து பாடசாலைகளுக்கும் விடுமுறை

பதுளை, ஜன. 10

பதுளை மாவட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் நேற்று முற்பகல் 11 மணிக்கு விடுமுறை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊவா மாகாண கல்வி பணிப்பாளர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

வளிமண்டலவியல் திணைக்களம் நேற்றுக்காலை வெளியிட்ட எதிர்வுகூறல்கள் மற்றும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட மண்சரிவு தொடர்பான விசேட எச்சரிக்கை அறிவித்தல் ஆகியவற்றின் அடிப்படையில் பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# நோர்வூட் பிரதேச செயலகத்துக்கு நிரந்தர கட்டடம் மிக அவசியம்

நுவரெலியா, ஜன. 10

நோர்வூட் பிரதேச செயலகத்துக்கு நிரந்தர கட்டடம் ஒன்று அமையும் பட்சத்திலேயே பிரதேச மக்களுக்கு அனைத்து வளங்களையும் வசதிகளையும் முழுமையாக பெற்றுக்கொள்ள முடியும் என்று சமூக செயல்பாட்டாளர் அருணாச்சலம் சண்முகம் வடிவு தெரிவித்துள்ளார்.

ஹற்றன் ரயில் நிலையத்தின் புதிய கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கிவரும் நோர்வூட் பிரதேச செயலகத்தை மீண்டும் நோர்வூட் பகுதிக்கு கொண்டு செல்ல வேண்டுமென வலியுறுத்தி பிரதேச செயலாளரிடம் மனுவொன்றை கையளித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# அம்பாறை மாவட்டத்தில் அதிகூடிய மழை வீழ்ச்சி

கல்முனை, ஜன. 10

நேற்றுக்காலை 9 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் அதிகூடிய மழை வீழ்ச்சி அம்பாறை மாவட்டத்தில் பதிவாகியுள்ளது.

அங்கு 38 மில்லி மீற்றர் அளவில் மழை பதிவாகியுள்ளது என்று நீரியல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நீர்ப்பாசன பணிப்பாளர் எல். எஸ். சூரியபண்டார நேற்றுக் காலை தெரிவித்தார்.

இதேநேரம் நாட்டின் ஏனைய பெரும்பாலான பகுதிகளில் 10 மில்லி மீற்றருக்கும் குறைவான மழைவீழ்ச்சியே பதிவாகியுள்ளது.

இதன் காரணமாக ஆறுகளின் நீர்மட்டம் அதிகரிக்கவில்லை என அவர் குறிப்பிட்டார்.

இருப்பினும், 73 பிரதான நீர்த்தேக்கங்களில் 28 நீர்த்தேக்கங்களும் அதேபோல் 22 நடுத்தர அளவிலான குளங்களும் இன்னும் வான் பாய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

யான் ஓயா மற்றும் தெதுரு ஓயா நீர்த்தேக்கங்களில் இருந்து நீர் வெளியேற்றம் கணிசமான அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

எனினும், எந்தவொரு ஆற்றுப் பள்ளத்தாக்கிலும் ஆபத்தான நிலைமை ஏற்படுத்தும் வகையில் நீர் வெளியேற்றப்படவில்லை என்றும் சூரியபண்டார மேலும் தெரிவித்தார். (எ)

# வீரநகர் கரையோர மீனவக்குடும்பங்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க கோரிக்கை

திருகோணமலை, ஜன. 10

திருகோணமலை வீரநகர் கரையோர பகுதியில் அதிக காற்று மற்றும் கடல் அலை சீற்றம் காரணமாக கரையோர பகுதியில் உள்ள மீனவர்களின் குடியிருப்புகள் தாழிறங்கியுள்ளன. இதனால், வாழ்விடத்தையும் வாழ்வாதாரத்தையும் இழந்து தவிப்பதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கரையோர பகுதியில் ஏற்கனவே நான்கு வீடுகள் கடல் சீற்றம் காரணமாக தாழிறங்கி சேதமாக்கப்பட்ட நிலையில் ஒரு பகுதிக்கு மாத்திரம் கடல் அரிப்பை தடுக்க கருங்கல் இடும் நடவடிக்கை இடம்பெறுகிறது. ஆனால், குறித்த கரையோரமானது 500 மீற்றருக்கும் மேலான தூரத்தை கொண்டுள்ளது. இதனால், முழுமையாக கடல் அரிப்பை தடுத்து தங்களின் குடியிருப்புகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது வரைக்கும் எங்களுக்கு அரசாங்கம் ஊடாக எந்தவித உதவியும் கிடைக்கவில்லை. டித்வா புயல் காரணமாக பாதிக்கப்பட்ட நிலையில் இரு மாதங்களாக கடற்றொழிலுக்கு செல்லவில்லை. கடலை நம்பியே வாழ்கிறோம். எமது மனைவி பிள்ளைகளும் எங்களை நம்பியே உள்ளனர். நாங்கள் நகரப் பகுதி மையத்தில் உள்ளோம். எமது பகுதி கடல் அரிப்பை தடுக்க யாரும் நடவடிக்கை எடுக்கவோ? பார்க்கவோ இல்லை. எமது வீடுகள் மற்றும் கோவில் எல்லாம் இந்த கடல் அரிப்பால் இல்லாமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது. எமது பிள்ளைகள் வெளியில் இறங்கி நடமாட முடியாதளவுக்கு கடலின் தாக்கம் சூழ்ந்துள்ளது. மீண்டும் ஓர் அபாய நிலையை எதிர்நோக்கியுள்ளோம். நாங்களும் இந்த நாட்டு பிரஜை தான். ஆனால், எங்களுக்கு உதவி செய்ய யாரும் முன்வரவில்லை.

எனவே, எங்களையும் எங்கள் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-12)

# "போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிக்க ஒன்றிணைந்து செயல்படுதல் வேண்டும்"

கல்முனை, ஜன. 10

போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிக்கும் நோக்கத்துடன் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே.இப்னு அஸார் வலியுறுத்தினார்.

போதைப்பொருள் அச்சுறுத்தலை கல்முனை மாநகர வர்த்தகர்களின் உதவியுடன் ஒழிப்பதற்கான பல்வேறு திட்டங்களை கல்முனை தலைமையக பொலிஸ் நிலையம் முன்னெடுத்துள்ளது.

இதற்கமைய கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய கேட்போர் கூடத்தில் கல்முனை மாநகர வர்த்தகர்களுடன் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

தேசிய பேரழிவாக மாறியுள்ள போதைப்பொருள் அச்சுறுத்தலை நாட்டிலிருந்து ஒழித்து, நாட்டின் எதிர்கால சந்ததியினரை இந்த அழிவிலிருந்து மீட்டெடுக்க அனைவரும் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும்.

மேலும், போதைப்பொருள் விநியோகத்தை ஒழித்தல், சோதனை நடவடிக்கைகளை விரிவுபடுத்துதல், போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு அளித்தல், போதைப்பொருள் பயன்பாட்டை தடுப்பதை நோக்கமாக கொண்ட வேலைத் திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் போதைப்பொருட்களுக்கு எதிராக சமூகத்தை வலுப்படுத்துதல் உள்ளிட்ட பன்முக அணுகுமுறையின் மூலம் கல்முனை மாநகரில் பரவலாக உள்ள போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிக்கும் நோக்கத்துடன் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என கேட்டுக்கொண்டார். (எ-01)

# வெள்ளத்தால் மலைபோல் குவிந்து கிடக்கும் மணல்!

நுவரெலியா, ஜன. 10

டித்வா சூறாவளி தாக்கத்தால் ஏற்பட்ட வெள்ளம், கொத்மலை நீர்த்தேக்கம் அமைந்துள்ள பகுதியில் இடம்பெற்ற பாரிய மண்சரிவு காரணமாக குறித்த நீர்த்தேக்கத்தில் சேறு மற்றும் மணல் மலைபோல் குவிந்து கிடக்கிறது.

நுவரெலியா மாவட்டத்தில் காணப்பட்ட மோசமான கால நிலை தாக்கத்தால் ஏற்பட்ட பாரிய மண்சரிவு காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு நிரம்பியுள்ள மணலை அபிவிருத்தி பணிகளுக்கு பயன்படுத்த முடியும் என்று பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.

அத்துடன் மண்சரிவால் ரம்பொடகம பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பெக்கோ இயந்திரம், இரண்டு லொறிகள், ஒரு வான், கார் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் என்பன காணாமல் போயுள்ளன. இதுவரை அதன் சிறு பாகங்களைக் கூட கண்டுபிடிக்க முடியாமல் உள்ளது. குறித்த வாகனங்கள் அனைத்தும் நீரில் அடித்து செல்லப்பட்டு நீர்த்தேக்கத்தின் அடியில் புதைந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. எனவே, மலைபோல் குவிந்து கிடக்கும் மண் கலந்த மணல்களை அகற்றினால் மாத்திரம்தான் காணாமல் போன வாகனங்களை கண்டுபிடிக்க முடியும் எனவும் பிரதேச வாசிகள் தெரிவித்தனர். (எ)

# கண்டி, நுவரெலியாவுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 10

கண்டி, நுவரெலியா உள்ளிட்ட மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நிலவும் மழை மற்றும் சமீபத்திய மண்சரிவு மற்றும் நிலையற்ற நிலைமைகளை கருத்தில் கொண்டு, தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தால் மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மண்சரிவு ஏற்படக்கூடிய பகுதிகளில் வசிக்கும் மக்கள், இக்கட்டான நிலைமைகளை கருத்தில் கொண்டு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு பின்வரும் பகுதிகளில் உள்ள மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டம் - மினிபே, மெததும்பர, பன்வில, தொலுவ, தெல்தோட்டை மற்றும் உடுதும்பர பிரதேச செயலகப் பிரிவுகள்.

பதுளை மாவட்டம் - கந்தகெட்டிய, பசறை, பதுளை, லுனுகல, ஹப்புத்தளை, எல்ல, பண்டாரவளை, ஹாலி எல, வெலிமட, மீகஹகிவுல மற்றும் ஊவா பரணகம.

மாத்தளை மாவட்டம் - வில்கமுவ, அம்பங்கங்க கோரள, ரத்தோட்டை, நாவுல, உக்குவலை மற்றும் லக்கல பல்லேகம.

நுவரெலியா மாவட்டம் - வலப்பனை, நிலடந்தஹின்ன, மதுரட்ட, ஹங்குரான்கெத்த மற்றும் நுவரெலியா ஆகிய பிரதேச மக்களுக்கு இவ்வாறு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ)

வெள்ளப்பெருக்கு காரணமாக

# கிரான் - புலிபாய்ந்தகல் இடையே போக்குவரத்து பாதிக்கப்பட்டது

மட்டக்களப்பு, ஜன. 10

சீரற்ற காலநிலையால் மட்டக்களப்பின் கிரான் பாலத்துக்கு அருகில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால், புலிபாய்ந்தகல் பகுதிக்கும் கிரானுக்கும் இடைப்பட்ட பாலத்தின் ஊடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

அங்கு போக்குவரத்துக்காக படகு சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பல குளங்களில் வெள்ளம் நிறைந்ததையடுத்து குளங்களின் வான் கதவுகள் அந்தந்த நீர்மட்ட அளவுகளுக்கு ஏற்ப திறந்துவிடப்பட்டுள்ளது.

இதேநேரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பிரதான குளங்களான உன்னிச்சை, நவகிரி, தும்பங்கேணி, றூகம், கட்டுமுறிவு, வாகனேரி, வெலிகந்தை, வடமுனை, புனானை, மாவடி ஓடை போன்ற குளங்களின் நீர்மட்டம் தொடர்ந்தும் உயர்ந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதனையடுத்து உன்னிச்சை குளத்தின் இரு வான் கதவுகள் 3 அடிக்கும் ஒரு வான்கதவு 4 அடிக்கும் திறந்துவிடப்பட்டுள்ளன.

குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டதை அடுத்து அந்த குளங்களை அண்டிய பகுதியில் வசிக்கும் மக்கள் வெள்ள அபாயம் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தியுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீளப்பெற்ற...

நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

ஏனைய வழக்குகளில் 34 வழக்குகளை மீண்டும் தாக்கல் செய்யப்போவதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எஞ்சியுள்ள 3 வழக்குகள் குறித்து அரசாங்கம் தற்போது தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றது.

"கடந்த அரசாங்கங்களின் காலத்தில் பல்வேறு காரணங்களுக்காக மீளப்பெறப்பட்ட வழக்குகளை மீண்டும் மீளாய்வு செய்து தாக்கல் செய்வோம் எனத் தேசிய மக்கள் சக்தி தேர்தல் காலத்தில் உறுதியளித்திருந்தது. அந்த வாக்குறுதிக்கு அமையவே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன," எனப் பிரதமர் மேலும் விளக்கமளித்தார். (அ)

## புதிய...

கல்னேவ, ஹந்துங்கம, அலுபெத்த சந்தியில் நடைபெற்ற இந்த நிகழ்வில், முழுமையாகப் பாதிக்கப்பட்ட வீடுகளுக்காக தலா 50 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி, தற்போதைய ஆரம்பகட்ட அறிக்கைகளின்படி, சூறாவளியினால் சுமார் 6,000 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும், பகுதியளவில் சேதமடைந்த வீடுகள் மற்றும் மக்கள் குடியிருப்பதற்குப் பாதுகாப்பற்றவை என அடையாளப்படுத்தப்பட்ட வீடுகள் என சுமார் 17,000 முதல் 18,000 வரை பதிவாகியுள்ளன. இதன்படி, சூறாவளி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக மட்டும் சுமார் 20,000 முதல் 25,000 வீடுகளைப் புதிதாக நிர்மாணிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது.

இது தவிர, 2026 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் ஏற்கனவே 31,000 வீடுகளை நிர்மாணிக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் கிராமப்புற வறிய மக்களுக்கான 10,000 வீடுகள், யுத்தத்தினால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழ்வோருக்கான 2,500 வீடுகள் மற்றும் இந்திய உதவியுடன் மலையக மக்களுக்கான வீடமைப்புத் திட்டங்கள் என பல திட்டங்கள் ஏற்கனவே தயாராக உள்ளதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பாதிக்கப்பட்ட மக்கள் தங்களது பழைய வாழ்க்கையை விடவும் தரம்மிக்க ஒரு வாழ்க்கையை முன்னெடுக்க வேண்டும் என்பதே எமது நோக்கம் எனத் தெரிவித்த ஜனாதிபதி, இதற்காக ஒரு வீட்டுக்கு 50 இலட்சம் ரூபாய் வீதம் வழங்கத் தீர்மானித்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

ஆரம்பத்தில் 20 இலட்சம் ரூபாயும், அதனைத் தொடர்ந்து கட்டுமானப் பணிகளின் முன்னேற்றத்தைப் பொறுத்து தலா 15 இலட்சம் ரூபாய் வீதம் இரு தவணைகளாக மீதித் தொகை வழங்கப்படும்.

நிதி வழங்குவதில் எவ்வித தாமதமும் இருக்காது என்பதால், அடுத்த 2 முதல் 3 மாதங்களுக்குள் இந்த வீடுகளைக் கட்டி முடிக்குமாறு அவர் மக்களைக் கேட்டுக்கொண்டார்.

முழுமையாகப் பாதிக்கப்படாமல், சிறிய அளவிலான சேதங்களுக்கு உள்ளான ஒவ்வொரு வீட்டுக்கும் தலா 5 இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. மக்களின் அடிப்படைத் தேவைகள் குறித்துப் பேசிய ஜனாதிபதி, "ஒரு மனிதனுக்குச் சிறந்த வருமான வழி, பிள்ளைகளுக்கான கல்வி, ஆரோக்கியமான வாழ்வு, தரமான ஒரு வீடு மற்றும் மன நிம்மதி ஆகிய ஐந்து விடயங்களும் மிக அவசியம். இவை நிறைவேற்றப்படாத நிலையில் ஒருவரால் முழுமையான மனிதனாக வாழ முடியாது. அந்த உரிமைகளை மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதே எமது அரசாங்கத்தின் கடமையாகும்," என வலியுறுத்தினார்.

இந்த நிகழ்வில் அடையாள ரீதியாக 26 பயனாளிகளுக்கு 50 இலட்சம் ரூபாய் நிதிக்கான ஆவணங்களை ஜனாதிபதி வழங்கினார். (அ)

## தைப்பொங்கல்...

பொங்கல் கொண்டாட்டத்திலும் ஜனாதிபதி கலந்து கொள்வார் என தெரியவருகிறது. (அ)

## இலங்கை...

போது, இந்த நில இணைப்பு திட்டம் முதலில் இலங்கையிலிருந்து முன்வைக்கப்பட்ட யோசனை என்றும், இந்தியாவினால் முன்மொழியப்பட்டதல்ல என்றும் தெரிவித்தார்.

"இந்த திட்டத்தை ஆரம்பிப்பதற்காக விரிவான திட்ட அறிக்கையை தயாரிப்பது தொடர்பான எங்களின் முன்மொழிவு இன்னும் இலங்கை அரசிடம் உள்ளது. அதற்கான பதிலை நாங்கள் காத்திருக்கிறோம். நில இணைப்பு திட்டம் இந்தியாவின் யோசனை அல்ல் அது இலங்கையின் முன்மொழிவாகும் என்பதை நினைவில் கொள்ளுவது முக்கியம்," என அவர் கேள்வி ஒன்றிற்கு பதிலளித்தார்.

இந்த திட்டத்துடன் இணைந்து செயல்பட இந்தியா தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

இரு நாடுகளின் மின்சார வலையமைப்புகளை இணைப்பது தொடர்பான திட்டம் குறித்து கேள்வி எழுப்பப்பட்டபோது, இது தொடர்பாக சந்திப்புகள் நடத்தப்பட்டுள்ளன என்றும், தொழில்நுட்ப விவரங்கள் விவாதிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போது திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நிதி கட்டமைப்பில் பணியாற்றி வருவதாக அவர் கூறினார். இருப்பினும், புயல் நிவாரண நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதால் சில கட்டுப்பாடுகள் ஏற்படக்கூடும் என்றும் அவர் ஒப்புக்கொண்டார்.

"வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் வருகை தந்தபோது, விவாதிக்கப்பட்ட ஒரே விடயம் புயல் நிவாரண நடவடிக்கைகள் தொடர்பானதுதான். ஒரு கட்டத்தில் நாங்கள் மீண்டும் இந்த உரையாடலை தொடங்கி, திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நிதி முறைகள் குறித்து பேசுவோம்," என்றார்.

"இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசுக்கு மிகுந்த உறுதி உள்ளது. ஏனெனில் இதனால் நாட்டுக்கு தெளிவான பலன்கள் கிடைக்கவுள்ளன. இலங்கையை ஒரு எரிசக்தி மையமாக உருவாக்கும் மின்சார வலையமைப்பு திட்டம் குறித்து ஏற்கனவே ஒரு சந்திப்பு நடைபெற்றுள்ளது. தற்போது, இரு தரப்பும் செய்ய வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் அவற்றை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது குறித்து தகவல்களை பரிமாறிக் கொண்டு வருகின்றோம்," என்றும் அவர் கூறினார். (அ)

## வடக்கு...

(மணிக்கு 3-5) இருந்தது.

இது இன்று காலை முல்லைத்தீவுக்கு அண்மித்து வடக்கு மாகாணத்தின் நிலப்பகுதியில் நுழைந்து பின்னர் யாழ்ப்பாணத்தினூடாக பாக்கு நீரிணைக்கு செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் தற்போது வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் கிடைத்து வரும் தூறல் மற்றும் மிதமான மழை இன்று இரவு முதல் படிப்படியாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நாளை காலை வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் கனமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

தற்போது வடக்கு மாகாணத்தின் கரையோரப் பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 40 கி.மீ.என்ற அளவில் உள்ளது அதேவேளை உள்நிலப்பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 30 கி.மீ. என்ற அளவில் உள்ளது. இது படிப்படியாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கு மாகாணத்தின் பல இடங்களிலும் கடல் மிக கொந்தளிப்பான நிலையில் காணப்படுவதனால் சில இடங்களில் கடல்நீர் உள்வரும் செயற்பாடும் அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த நிலை நாளை மாலை வரை நீடிக்கும்.

வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் குளிரான வானிலை நிலவுகிறது. இந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் வடக்கு மாகாணத்தின் ஊடாக ஈரப்பதனை உள்ளிழுப்பதனாலேயே இந்த குளிரான நிலைமை காணப்படுகின்றது. இந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் வடக்கு மாகாணத்தை விட்டு வெளியேறியதன் பின் குளிர் குறைவடையும்.

எனவே இந்த நிலைமைகள் தொடர்பில் மக்கள் தொடர்ந்தும் அவதானமாக இருப்பது அவசியம்.

கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் அவ்வப்போது மிதமான மழை கிடைக்கும். ஆனால் சில பகுதிகளுக்கு சற்று கனமான மழை கிடைக்கும். காற்றும் சற்று உயர்வான வேகத்தில் வீசும்-என்றார். (அ)

## முக்கிய...

முன்னேற்றத்தை பொலிஸ்மா அதிபர் தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

கடந்த பல தசாப்தங்களில் இலங்கையில் பல முக்கிய குற்றங்கள், குறிப்பாக கொலைகள், தண்டனை இன்றி இருந்து வந்துள்ள நிலையில், 2024 ஒக்ரோபரில் ஈஸ்டர் தாக்குதல், 2015 திறைசேரி பத்திர ஏலம் உள்ளிட்ட முக்கிய வழக்குகளின் விசாரணைகளை விரைவுபடுத்த சி.ஐ.டிக்கு உத்தரவிடப்பட்டது.

வர்த்தகர் தினேஷ் ஷாப்டர் மரணம் தொடர்பான விசாரணைகளையும் விரைவுபடுத்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு நடந்த இந்த கொலை வழக்கு இன்னும் தீர்வு காணப்படாத முக்கிய வழக்காக உள்ளது. மேலும், 2006 இல் காணாமற்போன கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். ரவீந்திரநாத் வழக்கு, 2005 இல் கொல்லப்பட்ட தமிழ் ஊடகவியலாளர் தராகி சிவராம், மற்றும் 2011 இல் யாழ்ப்பாணத்தில் காணாமல் போன லலித் குமார் வீரராஜ், குகன் முருகநாதன் ஆகியோரின் வழக்குகளையும் மீண்டும் தீவிரமாக விசாரிக்க உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன. (அ)

## டக்ளஸ்

குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பாடசாலை...

சபையினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. பாடப்புத்தகங்கள் அல்லது கற்றல் தொகுதிகளில் மாணவர்களுக்காக வழங்கப்பட்டு வந்த இணையதள முகவரிகள் மற்றும் கியூ.ஆர். குறியீடுகள் இனிவரும் காலங்களில் முழுமையாக நிறுத்தப்படும். தற்போது கற்றல் தொகுதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள இணையத்தளங்கள் மற்றும் ஏனைய மூலங்கள் எவற்றுக்கும் பணம் செலுத்தவேண்டிய அவசியம் இல்லை எனவும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்க இணையத்தளங்களைப் பயன்படுத்தும்போது வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் அல்லது கொள்முதல் தொடர்பான சிக்கல்கள் எதுவும் எழவில்லை என்பதையும் அவர் இதன்போது தெளிவுபடுத்தினார். (அ)

## 16 வயது...

செய்ததாக அதே இடத்தைச் சேர்ந்த 33 வயது சந்தேக நபரை பொலிஸார் கைது செய்து பி அறிக்கை மூலம் வவுனியா நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தி வழக்கு தொடரப்பட்டது.

2023 டிசெம்பர் 22 ஆம் திகதி, பாலியல் வன்புணர்வு புரிந்ததாக சந்தேக நபருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தால் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. குறித்த வழக்கு அரச சட்டவாதி சிவஸ்கந்தசிறியினால் நெறிப்படுத்தப்பட்ட நிலையில், குறித்த வழக்கின் சந்தேக நபரான வவுனியா விநாயகபுரம் பகுதியில் வசித்து வந்த 33 வயது நபர் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் வழக்கு விசாரணையின்போது உறுதி செய்யப்பட்டது.

குறித்த வழக்கு தீர்ப்புக்காக நேற்று திகதியிடப்பட்டிருந்த நிலையில் வழக்கு விசாரணைகளை அடிப்படையாகக் கொண்டு தீர்ப்பை வவுனியா மேல் நீதிமன்றம் வழங்கியது.

இதன்போது, வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம். எம்.மிஹால் திறந்த நீதிமன்றில் தீர்ப்பினை வாசித்துக் காட்டினார்.

குறித்த குற்றவாளிக்கு 10 வருட கடூழியச் சிறைத் தண்டனை வழங்கியதுடன் 10 ஆயிரம் ரூபாய் தண்டப் பணம் செலுத்துமாறும், தவறின் 2 மாத கால சாதாரண சிறைத் தண்டனையும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு இரண்டு இலட்சம் ரூபாய் செலுத்த வேண்டும் எனவும் தவறின், ஒரு வருட சிறை தண்டனையும் வழங்கி தீர்ப்பு அளிக்கப்பட்டது. (அ)

## தமிழர்...

மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்களை இவ்விடயத்தில் தொடர்புபடுத்தி வரலாற்று தகவல்களை தொகுத்து அவற்றை தமிழ் மொழி மூல பாடத்திட்டத்தில் உள்ளீர்ப்பு செய்யுமாறும் பிரதிநிதிகள் வலியுறுத்தினர். இந்த விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதுடன் எதிர்காலத்தில் தமிழ் வரலாறுகள் பாடத்திட்டங்களில் உள்ளீர்ப்பு செய்யப்படுமென பிரதமர் ஹரிணி அமரசூரிய இதன்போது தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரியவுக்கும் இடையிலான சந்திப்பு பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற குழுக்கூட்டம் நேற்று முன் தினம் வியாழக்கிழமை பாராளுமன்ற குழுவுத் தலைவர் சிவஞானம் ஸ்ரீதரன் தலைமையில் நடைபெற்றது. குறித்த கூட்டத்தின்போது பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய அவர்களை சந்தித்து முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதென தீர்மாணிக்கப்பட்டது.

அதனடிப்படையிலேயே நேற்று காலை குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது தமிழ் மொழி மூல வரலாற்று நூல்கள் மற்றும் பாடத்திட்டங்களில் தமிழர்களின் வரலாறுகள் நீக்கப்பட் டுள்ளமை பற்றி பிரதமரின் கவனத்திற்கு கொண்டுவரப்ப ட்டது. அவற்றினை மீண்டும் பாடப்புத்தகங்களில் கொண்டு வரவேண்டும் என தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பி னர்கள் கோரிக்கை விடுத்தனர்.

வடக்கு மற்றும் கிழக்கு பல்கலைக்கழகங்கள் மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தினை சேர்ந்த ஆய்வாளர்களை இவ்விடயத்தில் தொடர்புபடுத்தி வரலாற்று தகவல்களை தொகுத்து அவற்றை தமிழ் மொழி மூல பாடத்திட்டத்தில் உள்ளீர்ப்பு செய்ய இதன்போது பிரதமருக்கு ஆலோசனையும் வழங்கப்பட்டது. விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதுடன் எதிர்காலத்தில் தமிழ் வரலாறுகள் பாடத்திட்டங்களில் உள்ளீர்ப்பு செய்யப்படுமென பிரதமர் இதன்போது தெரிவித்துள்ளார்.

அத்துடன் தமிழ் பாட புத்தகங்கள் மற்றும் தரம் - 01 இற்கான பாடப்புத்தகங்களில் அதிக எழுத்துப்பிழைகள் காணப்படுவதாக இதன்போது பிரதமருக்கு தெரிவிக்கப்பட்டது. அவற்றினையும் விரைவாக திருத்தம்செய்ய நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் இதன்போது தெரிவித்தார்.

மேலும் க.பொ.த உயர்தர பரீட்சைக்கான வினாத்தாள்கள் தயாரிக்கும்போது அவை ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டு பின்னர் மொழிமாற்றம் செய்யப்பட்டே தமிழுக்கு மாற்றப்படுகின்றது. அதில் குறிப்பாக உயிரியல் பாட வினாத்தாள்கள். அவ்வாறு மொழிமாற்றம் செய்யும்போது நிறைய பிழைகள் ஏற்படுகின்றது. மொழி மாற்றத்தில் காணப்படும் சிக்கலினால் பரீட்சை பெறுபேறுகளிலும் அதிக தாக்கம் ஏற்படுகின்றது. இந்த விடயத்திற்கும் உடன் நடவடிக்கை எடுக்க கோரப்பட்டதுடன், இவ்விடயம் மீள நிகழாது என பிரதமர் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வெவ்வேறு திட்டங்களினூடாக அமைக்கப்பட்ட பல பாடசாலை கட்டிடங்கள் இன்னும் பூரணப்படுத்தப்படாதுள்ளது. அவற்றில் சில ஆபத்தான நிலையில் இடிந்துவிழும் நிலையில் மாணவர்களின் உயிருக்கு அச்சுறுத்தலாக உள்ளது. அவற்றினை பூரணப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் கோரப்பட்டது.

இதற்கு பதிலளித்த பிரதமர் கடந்த வருடம் மாகாணத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி பெருமளவில் பாவிக்கப்படாது மீண்டும் திருப்பியனுப்பப்பட்டுள்ளது. இவ்வருடம் உரிய அதிகாரிகளுடன் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் நேரடியாக தலையிட்டு மேற்படி விடயங்களுக்கும் குறித்த நிதியை பயன்படுத்தவும் பிரச்னைகளை தீர்க்கவும் நடவடிக்கையெடுக்குமாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் தொழினுட்ப கல்லூரியில் ஆரம்ப குழந்தை பருவ பராமரிப்பு மற்றும் கற்கை நெறியினை கடந்த 8 மாதங்களாக தமிழ் மொழி மூலம் கற்றுவருகின்றவர்கள் அதற்கான பரீட்டையினை ஆங்கில மொழியில் எழுத வேண்டும் என கட்டாயப்படுத்தப்படுகின்ற விடயம் தொடர்பில் பிரதமரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதனை அக்கறையோடு கேட்டுக்கொண்ட பிரதமர் விடயத்தை குறிப்பெடுத்ததுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

மேலும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலவும் பெருந்தொகை ஆசிரியர் வெற்றிடங்கள் தொடர்பிலும் பிரதமருடன் பேசப்பட்டது. வடக்கில் தமிழ்மொழி மூலம் 3,771 வெற்றிடங்களும், சிங்களமொழி மூலம் 68 வெற்றிடங்களும், கிழக்கில் 5854 வெற்றிடங்களும் நிலவுவதாக இதன் போது தெரிவிக்கப்பட்டது. இந்த வருட ஆசிரிய நியமனங்களின்போது இயலுமானவரை இந்த வெற்றிடங்களை நிரப்ப நாம் நிச்சயம் நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் தெரிவித்திருந்தார்.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் ஸ்ரீதரன், இராசமாணிக்கம் சாணக்கியன், பத்மநாதன் சத்தியலிங்கம், சண்முகம் குகதாசன், ஞானமுத்து ஸ்ரீநேசன், கவீந்திரன் கோடீஸ்வரன், துரைராசா ரவிகரன், ஸ்ரீநாத் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# தேசிய கொள்கையின் கீழேயே இனி முன்பள்ளிகள் இயங்கும்!

**சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர்**

* முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கவும் திட்டம்!



கொழும்பு, ஜன. 10

முன்பள்ளிகள் 9 மாகாணங்களிலும் வெவ்வேறு விதமாக செயல்படுகின்றன. அவற்றை தேசிய கொள்கையின் கீழ் ஒரே முன்பள்ளி நியதிக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சிறுவர், அமகளிர் விவகார அமைச்சர் சரோஜா போல் ராஜ் தெரிவித்துள்ளார்.

அத்துடன், முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு கடந்த ஜூலை மாதம் முதல் 6 ஆயிரம் ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன், அவர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு அமைச்சர் கூறினார்.

மேலும், 2024ஆம் ஆண்டு தகைமை பெற்ற முன்பள்ளி ஆசிரியர்கள் எண்ணிக்கை 15 ஆயிரத்து 669. 2025இல் இந்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 832 ஆகும். மகளிர் மற்றும் சிறுவர்கள் தொடர்பான சுற்றறிக்கை 2021, 2022 இன்படி தகைமை பெற்றுள்ள முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்களுக்கே மேற்படி கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

தகைமை பெற்றுள்ள மேற்படி கொடுப்பனவுக்கு உட்பட்டுள்ள எந்த முன்பள்ளி ஆசிரியர்களும் பதவி நீக்கம் செய்யப்படவில்லை. முன்பள்ளி பாடத்திட்டம் ஒன்றை நாம் உருவாக்கியுள்ளோம்.

இதற்கு மேலதிகமாக குறித்த விடயத்துக்கான பயிற்சிகள் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேற்படி அனைத்து ஆசிரியர்களையும் ஆசிரியர்களாக பதிவு செய்வதற்கு பயிற்சி டிப்ளோமோ பாடநெறி நடத்தப்பட்டுள்ளது.

13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின்படி முன்பள்ளிகள் மாகாண சபைகளுக்கு உட்பட்ட பாடசாலைகளாக மாகாண சபையின் முன்பள்ளிகள் அதிகார சபையின் கீழ் அவை கண்காணிக்கப்படுகின்றன. 9 மாகாணங்களில் வெவ்வேறு விதமாக செயல்படுகின்ற நிலையில் அந்த முன்பள்ளிகளை தேசிய கொள்கையின் கீழ் ஒரே முன்பள்ளி நியதியின் கீழ் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி கடந்த ஆண்டு 4,734 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜன. 10

கடந்த ஆண்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி தொடர்பில் 4 ஆயிரத்து 734 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடியில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக 791 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடியில் ஈடுபட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் உரிமம் பெற்ற இரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள், உரிமம் பெறாத வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் சுற்றிவளைக்கப்பட்டன. இதன்போது, 121 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிகளைத் தடுக்கும் முயற்சிகளை வலுப்படுத்துவதற்காக, விசேட பயிற்சி பெற்ற அதிகாரிகளைக் கொண்ட விசேட பொலிஸ் பிரிவு ஒன்று கடந்த ஆண்டு பணியகத்தில் நிறுவப்பட்டது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான விடயங்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 1989 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்துமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

## துப்பாக்கியுடன் கைதான சந்தேகநபருக்கு மறியல்

கொழும்பு, ஜன. 10

ரி - 56 ரக துப்பாக்கி, 16 தோட்டாக்களுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க பலபிட்டிய நீதிவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

அவரை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதன்படி, சந்தேக நபர் மீட்டியாகொட பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் விசேட அதிரடிப்படையின் கோனஹேன முகாமின் அதிகாரிகள் நடத்திய சுற்றிவளைப்பில், கடந்த 07 ஆம் திகதி மீட்டியாகொடை - ஹரன்னகொடைபகுதியில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அனர்த்த முகாமைத்துவத்துக்கென தனியான அமைச்சை நிறுவுங்கள்

**எதிர்க்கட்சி தலைவர் சஜித்**



கொழும்பு, ஜன. 10

காலநிலை மாற்றங்கள் நிகழும் போது அனர்த்த முகா மைத்துவ வழிமுறை முழுமையாக மாற வேண்டும். அனர்த்த முகாமைத்துவ துறைக்கென பிரத்தியேகமான அமைச்சு ஒன்றை நிறுவி புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகம், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம், வளிமண்டலவியல் திணைக்களம் போலவே தேவையான புதிய நிறுவனங்களையும் நிறுவி அவற்றை இந்த அமைச்சின் கீழ் கொண்டு வந்து பலப்படுத்த வேண்டும் - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.


நேற்றைய தினம் அவர் பாராளுமன்றில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், புதிய இடர் முகாமைத்துவ சட்டம் கொண்டுவரப்பட வேண்டும். சுமார் 35 ஆயிரம் வேலையில்லாப் பட்டதாரிகள் காணப்படுகின்றனர், இவர்களுக்கு இந்தத் துறைகளில் முறையான பயிற்சிகளை வழங்கி, இந்தியாவைப்போல அவசரகால படையணியை நிறுவ வேண்டும்.

2000 மற்றும் 2019ஆம் ஆண்டுகளுக்கு இடையில் மொனாச் பல்கலைக்கழகம் 9 நாடுகளில் 217 சூறாவளிகள் தொடர்பில் மேற்கோண்ட ஆய்வின் பிரகாரம், சுமார் 150 இலட்சம் இறப்புகள் இடம்பெற்றுள்ளன.

சூறாவளிகளுக்குப் பிந்தைய காலத்தில் ஏற்படும் இறப்புகள், சூறாவளிகளால் ஏற்படும் இறப்புகளைவிட அதிகம் என்று தெரியவந்துள்ளதால், புதிய அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தை வகுக்க வேண்டும்- என்றும் அவர் கோரிக்கை விடுத்தார். (ஐ)

## 10 ஹெலிகளை இலங்கைக்கு வழங்குகின்றது அமெரிக்கா!



கொழும்பு, ஜன. 10

பேரிடர் சூழ்நிலைகளில் பயன்படுத்துவதற்காக இலங்கைக்கு 10 ஹெலிகொப்டர்களை நன்கொடையாக வழங்கவுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்க தூதர் ஜூலி சங், தனது "எக்ஸ்" தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ரி. எச். -57 (பெல் 206 சீ ரேஞ்சர்) வகையைச் சேர்ந்த ரெக்சாஸில் தயாரிக்கப்படும் ஹெலிகொப்டர்களே இவ்வாறு அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன.

"டித்வா" சூறாவளி போன்ற இயற்கை பேரழிவுகளின் போது கண்காணிப்பு மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் இவை முக்கிய பங்கை வகிக்கும். இலங்கை விமானப்படைக்கு இந்த 10 ஹெலிகொப்டர்களை வழங்குவது அதன் ஹெலிகொப்டர் படையணியை வலுப்படுத்தும். மேலும், விமான ஓட்டும் பயிற்சியை மேம்படுத்தல் மற்றும் மிகவும் திறமையான பேரிடர் நடவடிக்கைகளுக்கு பங்களிப்பு வழங்கும் - என்றும் கூறியுள்ளார். (ஐ)

சக சிறை அதிகாரிமீது

## தாக்குதல் நடத்த உடந்தை 4 சிறை அதிகாரிகள் கைது

கொழும்பு, ஜன. 10

சிறை அதிகாரி ஒருவரை தாக்க கைதிகள் இருவருக்கு உடந்தையாக இருந்தனர் என்ற குற்றச்சாட்டில் சிறை அதிகாரிகள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பூஸா சிறைச்சாலையில் கடந்த டிசெம்பர் 7ஆம் திகதி சிறைச்சாலை அதிகாரி மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதில், காயமடைந்த சிறைச்சாலை அதிகாரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் ரத்கம பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் கைதிகளுக்கு சிறை அதிகாரிகள் நால்வர் உடந்தையாக செயல்பட்டமை கண்டறியப்பட்டது.

இதையடுத்து அவர்கள் செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## முல்லைத்தீவு சிறுமி மரணம் விசாரணைகள் நடக்கின்றன!

**அமைச்சர் நளிந்த சபையில் தெரிவிப்பு**

கொழும்பு, ஜன. 10

முல்லைத்தீவில் உணவு ஒவ்வாமையால் 12 வயது சிறுமி உயிரிழந்தமை தொடர்பில் விசாரணைகள் நடைபெறுகின்றன என்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் 12 வயது சிறுமி உணவு ஒவ்வாமை காரணமாக, கடந்த டிசெம்பர் 21 ஆம் திகதி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர், உயிரிழந்தமை தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று கேள்வி எழுப்பப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா எழுப்பிய இந்தக் கேள்விக்கு சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ பதிலளித்துள்ளார்.

"குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. விசாரணை தொடர்பான விடயங்கள் தற்போது அறிவிக்கப்படும் பட்சத்தில், அது விசாரணை செயல்பாடுகளுக்கு இடையூறாக அமையும். எனவே, சம்பவம் தொடர்பான விசாரணைகள் நிறைவு பெற்றதன் பின்னர், அனைத்து விடயங்களும் வெளிப்படுத்தப்படும்", என்று கூறினார். (ஐ)

## இ. போ. ச. பேருந்து சாரதிகளுக்கு இனி போதைப்பொருள் சோதனை

**வேலைத்திட்டம் ஆரம்பித்து வைப்பு**

கொழும்பு, ஜன. 10

இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சாரதிகளுக்கு போதைப்பொருள் சோதனை நடத்துவதற்கான வேலைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் ஒழுக்கமான சாரதி சமூகத்தை உருவாக்கவும் போக்குவரத்து அமைச்சு இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்படி, இலங்கை போக்குவரத்து சபையின் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் போதைப்பொருட்களைப் பயன்படுத்தியுள்ளனரா என்பதை கண்டறியும் விசேட சோதனை நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் முதல் நாடு தழுவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த விசேட வேலைத்திட்டம் கொழும்பு - மட்டக்குளி பேருந்து டிப்போ வளாகத்தில் உத்தியோகபூர்வமாகத் தொடங்கி வைக்கப்பட்டது. தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனம், போக்குவரத்து அமைச்சு மற்றும் பொலிஸார் இணைந்து இந்த நடவடிக்கையை முன்னெடுக்கின்றனர். இதற்காக நவீன வசதிகளுடன் கூடிய நடமாடும் ஆய்வுக்கூட பேருந்து ஒன்று தயார்ப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான சோதனைகள் முன்கூட்டியே அறிவிக்கப்படாமல், டிப்போக்கள், பேருந்து நிலையங்கள், ஊழியர் ஓய்வறைகளில் திடீரென மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாண[illegible] பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.01.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.